## ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6.

## பத்திரிகைச் செய்தி

2020 - 2021 ஆம் ஆண்டு முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை -1 / கணினி பயிற்றுநர் நிலை – 1 நேரடி நியமனத்திற்கான அறிவிக்கை (Notification) No. 01 / 2021, நாள் 09.09.2021ன்படி 12. 02. 2022 முதல் 20. 02. 2022 வரை நடைபெற்ற கணினி வழித் தேர்வுகளுக்கு 09.04.2022 அன்று உத்தேச விடைக்குறிப்புகள் வெளியிடப்பட்டன.

ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்ட உத்தேச விடைக்குறிப்பின் மீது தேர்வர்களின் ஆட்சேபனைகள் 09.04.2022 மாலை 06.00 மணி முதல் 13.04.2022 மாலை 05.30 மணி வரை 29141 ஆட்சேபனைகள் பெறப்பட்டுள்ளது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் செயல்முறைத் தேர்வு மற்றும் பருவத் தேர்வுகள் நடைபெற்று வரும் நிலையில், பகுதியாக (Phased Manner) பாடவாரியாக மட்டுமே பாடவல்லுநர்கள் அழைக்கப்பட்டு, விடைக்குறிப்பினை மறுஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைய குறைந்தபட்சம் ஒரு மாத கால அவகாசம் தேவைப்படும். இப்பணி முடிவுற்றதும் இறுதி விடைக்குறிப்பு வெளியிடப்படும். அதன் பின் விடைத்தாட்கள் கணினிவழி திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். இதற்கு குறைந்தபட்சம் 45 நாட்கள் தேவைப்படும். அதன்பிறகு சான்றிதழ் சரிபார்ப்பிற்கு குறைந்தபட்சம் ஒருமாத கால அவகாசம் தேவை. தெரிவுப்பட்டியல் ஜீலை 2022 இறுதியில் வெளியிட அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

நாள் : 16 .05. .2022

**தலைவர்**